**தேவகோட்டை நகராட்சி.**

**சாதாரணக்கூட்டம்.**

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 11.04.2022–ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு சாதாரணக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஒப்பம்) கா.சுந்தரலிங்கம்
நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகர்மன்றம்.

**பொருள்: 4**

தேவகோட்டை நகராட்சி 2022–2025ம், ஆண்டிற்கான மூன்றாண்டு குத்தகை இனங்களில் நகராட்சிக்கு சொந்தமான இருசக்கர வாகன நிறுத்துமிடம் குத்தகை உரிமம் பெற 25.03.2022ம், தேதியன்று நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டவாறு ஏலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | இனம் எண். | இனம் | பெயர் | ஏலத் தொகை | குறைந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி | அதிக பட்ச ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|---|---|
| 1. | 9 | இருசக்கர வாகன நிறுத்துமிடம் | திரு.சுப.போஸ் த/பெ.சுப்பையா | – | 6,06,000/– | – |
| 2. | | | திரு.பெரி.குணாளன், த/பெ. பெரியசாமி | – | 5,52,000/– | – |
| 3. | | | திரு.சுப.பாண்டியன் த/பெ.பெரி.சுப்பிரமணியன் | – | – | 7,02,000/– |
| 4. | | | திரு.பா.பெரியகருப்பன் த/பெ.பாலமுருகன் | – | 6,30,000/– | – |

மேற்படி இனத்திற்கு எவரும் பொது ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. நான்கு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில், கலந்து கொள்ள வைப்புத்தொகை மற்றும் கூடுதல் காப்புத்தொகையினை செலுத்தி உள்ளனர். மேலும் வரிசை எண்.1, 2, 3 மற்றும் 4ல் கண்ட ஒப்பந்ததாரர்களில் மூன்றாவது நபரான திரு.சுப.பாண்டியன் த/பெ.பெரி.சுப்பிரமணியன் என்பவர் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.7,02,000/–க்கு, கோரியுள்ளார் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ)ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ள திரு.சுப.பாண்டியன் த/பெ.பெரி.சுப்பையா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.7,02,000/– ஆனது. இந்நகராடசியின் மூன்றாண்டுகளில் இதே இனத்திற்கான சராசரி தொகை ரூ.3,81,453/–ஐ, விட 54 % அதிகமாக கேட்டுள்ளார். கடைசி ஆண்டு ஏலத்தொகை ரூ.4,00,208/–ஐ, விட ரூ.3,01,792/–ஐ, அதிகமாக கேட்டுள்ளார். எனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். அன்னாருக்கு குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு

மேற்காணும் இனத்திறகு முதல் ஆண்டிற்கு உரிமம் வழங்கி ஒப்படைப்பு செய்யவும் இரண்டாம் ஆண்டுக்கு முதல் ஆண்டு ஏலத்தொகையில் இருந்து 5 % உயர்வு செய்து உத்தரவு வழங்கவும். (வரிகள் சரக்கு மற்றும் சேவைக்கட்டணம், தொழில்வரி, வருமானவரி தனி) மூன்றாம் ஆண்டுக்கு இரண்டாம் ஆண்டு ஏலத்தொகையிலிருந்து 5% உயர்வு செய்து (வரிகள் சரக்கு மற்றும் சேவைக்கட்டணம், தொழில்வரி, வருமானவரி தனி) உத்தரவு வழங்கவும் மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 25.03.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்: 5</u>

தேவகோட்டை நகராட்சி 2022–2023ம், ஆண்டிற்கான ஒன்பது ஆண்டு குத்கை இனங்களுக்கு நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலைய 8 கடைகளில் 6 நம்பர் கடை, பேருந்து நிலைய வடக்கு பகுதி கடைகளில் 3 நம்பர் (மாஸ்டர்பேக்கரி அருகில்) மற்றும் பேருந்து நிலைய வடக்கு பகுதி கடைகளில் 4 நம்பர் (மாஸ்டர்பேக்கரி) அருகில் கடைகளுக்கு 25.03.2022ம், தேதியன்று நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டவாறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட கடைகளின் ஏலம்/ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | கடை எண். | பெயர் | ஏலத் தொகை | குறைந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி | அதிக பட்ச ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1. | பேருந்துநிலைய 8 கடைகளில் 6 நம்பர் கடை | திரு.சுப.மும்முடிநாதன், | – | – | 15500 |
| 2. | பேருந்து நிலைய வடக்கு பகுதி கடைகளில் 3 நம்பர் கடை மாஸ்டர்பேக்கரி அருகில் | திரு.மு.பழனிச்சாமி | ரூ.22500 | – | – |
| | | திரு.பி.சரவணக்குமார் | – | – | – |
| | | திரு.ஏ.சீமான்ராஜா | – | ரூ.15000 | |
| | | திரு.ஆர்.லெனின் ராஜா | – | – | ரூ.24600 |
| | | திரு.பி.கார்த்திகேயன் | – | – | – |
| 3. | பேருந்து நிலைய வடக்கு பகுதி கடைகளில் 4 நம்பர் கடை மாஸ்டர்பேக்கரி அருகில் | திரு.எஸ்.மணியன் | – | – | – |
| | | திரு.எஸ்.கார்த்திகேயன் | – | ரூ.15000 | – |
| | | திரு.எம்.கண்ணன் | – | – | – |
| | | எம்அன்னபூரணி | – | ரூ.22000 | – |
| | | திரு.ஆர்.லெனின்ராஜா | – | – | ரூ.33000 |

மேற்கண்ட வரிசை எண்.1ல், உள்ள ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் ஒரு நபர் மட்டும் ஒப்பந்தப்பள்ளி மதிப்பீடு வழங்கி உள்ளார். வரிசை எண்.2 மற்றும் 3ல், ஏலத்தொகை விட ஒப்பந்தப்புள்ளி மதிப்பு கூடுதலாக வழங்கப்பட்டதனை ஏற்கலாம். மேற்கண்ட கடையினை ஒப்படைக்கும் முன் ஆறு மாத வாடகையினை முன்பண தொகையாக பெற்று கடையினை ஒப்படைப்பு செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

__அலுவலகக்குறிப்பு—__

1) பேருந்துநிலைய 8 கடைகளில் 6 நம்பர் கடைக்கு திரு.சுப.மும்முடிநாதன் மட்டும் ஒரு ஒப்பந்தப்புள்ளி தொகையினை வழங்கியுள்ளார். ஒருவர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க இயலாது. மேலும் மன்றம் முடிவு செய்யலாம்.

2) பேருந்து நிலைய வடக்கு பகுதி கடைகளில் 3 நம்பர் (மாஸ்டர்பேக்கரி அருகில்) கடைக்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை மதிப்பு வழங்கிய திரு.ஆர்.லெனின் ராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி அரசு மதிப்பீட்டை விட கூடுதலாக கேட்டுள்ளார். அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகையினை மன்றம் முடிவு செய்யலாம்.

3) பேருந்து நிலைய வடக்கு பகுதி கடைகளில் 4 நம்பர் கடை மாஸ்டர்பேக்கரி அருகில் உள்ள கடைக்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை மதிப்பு வழங்கிய திரு.ஆர்.லெனின் ராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி அரசு மதிப்பீட்டை விட கூடுதலாக கேட்டுள்ளார். அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகையினை ஏற்கவும் மன்றம் முடிவு செய்யலாம்.

பொருள் 1 ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றதால் மறு ஏலம் வைக்கலாம்.

பொருள் 2 மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் 3 பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 25.03.2022—ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

__பொருள்: 6__

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விவேகா (அறக்கட்டளை) தொண்டு நிறுவனம் 45 DBC பணியாளர்களைக் கொண்டு டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி நிறுவனத்தின் பணிநீடிப்பு காலம் வருகின்ற 31.03.2022 அன்றுடன் முடிவடைகிறது.

தற்போது இந்நகர் பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள், தொற்றுநோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், டெங்கு வைரஸ் காய்ச்சல் பரவா வண்ணம் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் பொதுமக்களின் பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தொற்று தடுப்பு பணி என்பதால் தற்போது பணி பார்த்து வரும் விவேகா (அறக்கட்டளை) தொண்டு நிறுவனம் மூலம் பழைய விலை விகிதத்திலே ஆணையாளர் அவர்கள் 09.03.2022—ந் தேதிய உத்தரவின்படியும், துப்பரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படியும், மேலும் ஒருமாத காலத்திற்கு (01.04.2022 முதல் 30.04.2022 வரை) பணி நீடிப்பு செய்து உத்தரவு வழங்கவும்.

அதற்காகும் உத்தேச தொகை ரூ.3,00,000/—த்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:—

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணி மேற்கொள்ள ஆகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

இ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 30.03.2022—ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:1769/2020/எச்1

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

பொருள்:7

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொள்ள போதுமான நிரந்தர தூய்மை பணியாளர்கள் இல்லாதநிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் – சென்னை அவர்களின் 20.08.2015–ந் தேதிய நிர்வாக அனுமதியின்படி 115 தூய்மை பணியாளர்களை கொண்டு தனியார் ஒப்பந்த நிறுவனமான ஸ்ரீ மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி என்பவர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 09.12.2018–ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில் புதிய ஒப்பந்த புள்ளி கோர மாவட்ட ஆட்சியர் – சிவகங்கை அவர்களின் 2019–2020–ம் வருட தினக்கூலி ஊதிய நிர்ணயத்தின்படி 115 தூய்மை பணியாளர்களுக்கு ஊதிய கணக்கீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் – சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கோரி கருத்துரு அனுப்பட்டுள்ளது.

நிர்வாக அனுமதி கிடைக்க காலதாமதமான நிலையில் 09.03.2022–ந் தேதிய குறிப்பில் 02.10.2021 – ந்தேதிய நகராட்சி நிர்வாக இயக்குனர் – சென்னை அவர்களின் கடிதத்தில் கேட்டுள்ளவாறு தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியான பணியாளர்களின் அளவுகோல் மற்றும் ஒரே மாதிரியான ஊதிய விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் புதிய கருத்துரு தயார் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பணி நீடிப்பு தற்போது 31.03.2022 அன்றுடன் முடிவடையும் நிலையில் உள்ளது.

நகராட்சி நிர்வாக அனுமதி பெறும் வரையில் திடக்கழிவு மேலாண்மை பொதுசுகாதாரப் பணி பாதிக்காமல் இருக்கவும் தற்போது இந்நகர் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வரும் மதுரை ஸ்ரீ மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி நிறுவனத்திற்கு 09.03.2022–ந் தேதிய துப்பரவு ஆய்வர் அவர்களின் குறிப்பின்படியும், ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படியும் மேலும் ஒருமாத காலத்திற்கு (01.04.2022 முதல் 30.04.2022 வரை) ஏற்கனவே உள்ள பணி விதிகளுக்குட்பட்டு பணி மேற்கொள்ள பணி நீடிப்பு உத்தரவு வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.15,00,000/– த்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணி மேற்கொள்ள ஆகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

இ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 30.03.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

ந.க.எண்:1009/2007/எச்1

பொருள்:8

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் 30 தூய்மை பணியாளர்களைக் கொண்டு 4194/2018/எச்1, நாள்:19.01.2022–ன்படி மதுரை ஸ்ரீ மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் 31.03.2022 –ந் தேதியுடன் முடிவடையும் நிலையில் உள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் – சென்னை அவர்களின் 02.10.2021–ந் தேதிய கடிதத்தில் தமிழக அரசால் மாநிலம் முழுவதும் தனியார்மய பணிக்கு ஒரே மாதிரியான பணியாளர் அளவுகோல் மற்றும் ஒரே மாதிரியான ஊதியம் என்ற அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் – சென்னை அவர்களால் கருத்துரு கோரப்பட்டு இந்நகராட்சி மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி நிர்வாக அனுமதி பெரும் வரையில் இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பணிகள் பாதிக்காவண்ணம் மேற்படி நிறுவனத்திற்கு பழைய விலை விகிதத்திலே துப்பரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படியும், ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படியும் மேலும் ஒருமாத

காலத்திற்கு (01.04.2022 முதல் 30.04.2022 வரை) பணி நீடிப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.3,00,000/—த்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:—

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணி மேற்கொள்ள ஆகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

இ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 30.03.2022—ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்:9</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை தரணி அஸோஸிஸ்யேட்ஸ் — மதுரை நிறுவனத்தார் அவர்களால் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்களின் பராமரிப்பு பணி காலம் 31.03.2022—ல் முடிவடைகிறது. மேற்படி பணி நீடிப்பு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் அனுமதி பெற்றே பணி நீடிப்பு செய்யவேண்டும். ஆனால் நகராட்சி இயக்குநர் அவர்களின் 08.09.2021—ந் தேதிய கடிதத்தில் அனைத்து தெருவிளக்குகளையும் LED—யாக மாற்றம் செய்ய வேண்டி மதிப்பீடு தயார் செய்து அனுப்பிட தெரிவித்துள்ளார். அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளை LED—யாக மாற்றம் செய்ய ரூ.275.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி LED—யாக மாற்றம் செய்திட உத்தரவு வரும்வரை தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை செய்திட தற்போது பார்த்து வரும் தரணி அஸோஸியேட்ஸ் நிறுவனத்தாருக்கு 01.04.2022 முதல் 30.04.2022 வரை ஒரு மாதத்திற்கு பணி நீடிப்பு செய்திடவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.3,30,000/—த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:—

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

இ) பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 30.03.2022—ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்:10</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர் — சென்னை அவர்களின் சுற்றறிகை ந.க.எண் 1725/2022/எம்3 நாள் 24.02.2022—ன்படி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் — மதுரை அவர்களின் கடிதம் 1723/2022/பி1 நாள் 01.04.2022—ன்படியும் முதல்தர நகராட்சிக்கு 3 ஈப்பு வாகனங்கள் உபயோகப்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியில் TN63 AS 1648 எண்ணுள்ள ஈப்பு வாகனம் ஒன்று மட்டுமே உள்ளது.

ஒரு வாகனம் மட்டுமே உள்ளதால் பணிகளில் சுணக்கம் ஏற்படும் நிலை உள்ளது. எனவே புதிதாக 2 வாகனங்கள் வாங்க அரசு அனுமதிபெற்ற விலை விகிதத்தில் வாங்க நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

அ) பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்:11</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்கள் மற்றும் **9** ஆண்டு குத்தகை இனங்கள் ஒப்பந்தப்புள்ளி/ஏலம் நடைபெற உள்ளது என செய்திதாளில் விளம்பரம் செய்தவகையில் பட்டியல் வரப்பெற்று உள்ளது. பட்டியல்படி கீழ்காணும் விபரப்படி தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) பிற்பகல் நாளிதழ்
   Bill No.AD/902/PP/21-22 dated 18.03.2022
   Amount: Rs.9975/-
2) தினசூரியன் நாளிதழ்
   Bill No.5907 dated 17.03.2022
   Amount: Rs.19530/-
3) தினசங்கு நாளிதழ்
   Bill No.212 dated 25.01.2022
   Amount: Rs.9800/-

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்: 12</u>

**ந.க.எண்.0082/2020/அ2, நாள் 25.03.2022.**

தேவகோட்டை நகராட்சி **2022–2025**ம், ஆண்டிற்கான மூன்றாண்டு குத்தகை இனங்களில் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலையோர கடைகளின் வசூல் உரிமம் குத்தகை உரிமம் பெற **25.03.2022**ம், தேதியன்று நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டவாறு ஏலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | இனம் எண். | இனம் | பெயர் | ஏலத் தொகை | குறைந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி | அதிக பட்ச ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|---|---|
| 1. | 14 | நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலை யோர கடைகளின் வசூல் உரிமம் | திரு.ஆர்.லெனின் ராஜா | – | 8,00,000/– | – |
| 2. | 14 | | திரு.எஸ்.மணியன் | – | 18,12,000/– | – |
| 3. | 14 | | திரு.எஸ்.தில்லைராஜா | – | – | 21,50,000/– |
| 4. | 14 | | திரு.சு.மாதவன் த/பெ.சுப்பிரமணியன் | – | 15,03,000/– | – |
| 5 | 14 | | திரு.ஜே.விக்னேஷ் | – | 12,00,000/– | |

மேற்படி இனத்திற்கு ஒருவரும் பொது ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. ஐந்து நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில், கலந்து கொள்ள வைப்புத்தொகை மற்றும் கூடுதல் காப்புத்தொகையினை செலுத்தி உள்ளனர். மேலும் வரிசை எண்.1, 2, 3, 4 மற்றும் 5ல் கண்டவர்களில் மூன்றாவது நபரான

திரு.எஸ்.தில்லைராஜா, என்பவர் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.21,50,000/–க்கு, கேட்டுள்ளார் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ள திரு.எஸ்.தில்லைராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.21,50,000/– ஆனது. இந்நகராடசியின் மூன்றாண்டுகளில் இதே இனத்திற்கான சராசரி தொகை ரூ.13,82,400/–ஐ, விட 64% அதிகமாக கேட்டுள்ளார். கடைசி ஆண்டு ஏலத்தொகை ரூ.11,68,000/–ஐ, விட ரூ.9,82,000/–ஐ, அதிகமாக கேட்டுள்ளார். எனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். அன்னாருக்கு குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்காணும் இனத்திறகு முதல் ஆண்டுக்கு உரிமம் வழங்கி ஒப்படைப்பு செய்யவும் இரண்டாம் ஆண்டுக்கு முதல் ஆண்டு ஏலத்தொகையில் இருந்து 5 % உயர்வு செய்து உத்தரவு வழங்கவும். (வரிகள் சரக்கு மற்றும் சேவைக்கட்டணம், தொழில்வரி, வருமானவரி தனி) மூன்றாம் ஆண்டுக்கு இரண்டாம் ஆண்டு ஏலத்தொகையிலிருந்து 5% உயர்வு செய்து (வரிகள் சரக்கு மற்றும் சேவைக்கட்டணம், தொழில்வரி, வருமானவரி தனி) உத்தரவு வழங்கவும் மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம்: நகராட்சி சாலையோர கடைகளில் வசூல் செய்யும் உரிமத்தை பொதுமக்கள் மற்றும் வர்த்தக சங்கங்கள் சிறு வியாபாரிகளின் கோரிகையை ஏற்று மேலும் 27 நகர்மன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால் பொருள் 12–ஐ இந்த மன்றம் ரத்து செய்கிறது.**

**பொருள்:13**

தேவகோட்டை நகராட்சிக்குச் சொந்தமான 9–வது தொகுதி நகராட்சி துவக்கப்பள்ளி தேனம்மை ஊரணி தெற்கு பகுதியில் அமைந்துள்ளது. அதில் புதிதாக சமையல் கூடம் கட்டப்பட்டுள்ளது. அதற்கு முன்புறம் செட் அமைத்து பேவர் பிளாக் தளம் அமைக்க வேண்டியுள்ளது. மேலும் பள்ளி முன்பு மழைநேரங்களில் மழைநீர் தேங்குவதால் மாணவர்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே அதனை சரிசெய்ய மண் அடித்து சமப்படுத்தவும் உத்தேச செலவீனம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) கல்விநிதியில் பணியை மேற்கொள்ளலாம்.

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:14**

தேவகோட்டை நகராட்சிக்குச் சொந்தமான 9–வது தொகுதி நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் 16–வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளிகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க உத்தேச செலவீனம் ரூ.2.00 இலட்சம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) கல்விநிதியில் பணியை மேற்கொள்ளலாம்.

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:15**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் தினசரி ஆய்வுக் கூட்டத்தில் 2021–2022ம் ஆண்டிற்கான வரி வசூல் சதவிகிதம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதாலும், மேலும் நிதியாண்டு முடிவடைவதற்கு இன்னும் 1 மாத காலமே உள்ளதால், வரி மற்றும் வரியற்ற இனங்களில்

வசூலை தீவிரப்படுத்த ஒலிபெருக்கி மூலம் ஆட்டோவில் 1 முதல் 27 வார்டுகளுக்கும் விளம்பரம் செய்ய உத்தேச செலவினம் ரூ.90,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:16**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e,. Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன்படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்துவரி/காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:–</u>

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building**):-

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு (ச.அடி ஒன்றுக்கு) | பரப்பளவு (ச.அடி ஒன்றுக்கு) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|---|---|
| **A** | 0.90 | <=600 | 1.25 |
| **B** | 0.80 | 601-1200 | 1.5 |
| **C** | 0.70 | 1201-1800 | 1.75 |
| **D** | 0.60 | >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building**):-

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

| குடியிருப்பு. | | | | | |
|---|---|---|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | கட்டிடத்தின் சதுரடிக்கு | | | |
| | | **<=600** | **601-1200** | **1201-1800** | **>1800** |
| | | 1.25 | 1.5 | 1.75 | 2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **A** | 0.90 | 1.13 | 1.35 | 1.58 | 1.80 |
| **B** | 0.80 | 1.00 | 1.20 | 1.40 | 1.60 |
| **C** | 0.70 | 0.88 | 1.05 | 1.23 | 1.40 |
| **D** | 0.60 | 0.75 | 0.90 | 1.05 | 1.20 |

| வணிகம். | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (x2) |
| A | 2.70 | 5.40 |
| B | 2.40 | 4.80 |
| C | 2.10 | 4.20 |
| D | 1.80 | 3.60 |

| தொழிற்சாலை | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (x1.75) |
| **A** | 1.35 | 2.36 |
| **B** | 1.20 | 2.10 |
| **C** | 1.05 | 1.84 |
| **D** | 0.90 | 1.58 |

| சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (x1.75) |
| **A** | 1.35 | 2.36 |
| **B** | 1.20 | 2.10 |
| **C** | 1.05 | 1.84 |
| **D** | 0.90 | 1.58 |

மண்டல வாரியாக காலிமனைவரி சீராய்வு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டு ள்ளது.

| காலிமனைவரி | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு (ச.அடி | வரிசீராய்வின் போது காலிமனை இடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (x2) (ச.அடி ஒன்றுக்கு) |

| | | |
|---|---|---|
| | ஒன்றுக்(கு) | |
| A குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ள தெருக்கள் பகுதி | 0.15 | 0.30 |
| B முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைக்கு இட்டு செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் அல்லாதவை | 0.20 | 0.40 |
| C முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைக்கு இட்டு செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் | 0.30 | 0.60 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:–**

1) **600** சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) **601** முதல் **1200** சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) **1201** முதல் **1800** சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) **1800** சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் **100**% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு:–</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, **1** சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு **100** சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:–</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் **6** % உயர்வு அல்லது கடந்த **5** ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம்

இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் தேவகோட்டை நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(Current Liabilities) (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 53.00 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 316.61 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 1100.86 |
| 4 | பணியாளர்களுக்கு வழுங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 250.72 |
| | **மொத்தம்** | **1721.19** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், தேவகோட்டை நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

**தேவகோட்டை நகராட்சி சொத்துவரி மற்றும் காலிமனைவரி மண்டல பட்டியல்**

| வ.எண் | வார்டு எண் | தெருக்களின் விபரம் | சொத்துவரி மண்டல மதிப்பீடு | காலியிடவரி மண்டல மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1 | 1 | அழகாபுரிநகர் | A | A |
| 2 | 1 | அழகாபுரிநகர் வடக்கு | A | A |
| 3 | 1 | அழகாபுரிநகர் தென்கரை | A | A |
| 4 | 1 | அழகாபுரிநகர் மேற்கு | A | A |
| 5 | 1 | இராம்நகர் தெரு எண்–1 | A | A |
| 6 | 1 | இராம்நகர் தெரு எண்–2 | A | A |
| 7 | 1 | இராம்நகர் தெரு எண்–3 | A | A |
| 8 | 1 | இராம்நகர் தெரு எண்–4 | A | A |
| 9 | 1 | இராம்நகர் தெரு எண்–5 | A | A |
| 10 | 1 | சிவகங்கைராஜா சாலை | A | A |
| 11 | 1 | அழகாபுரிநகர் கீழ்கரை | A | A |
| 12 | 1 | இராம்நகர் | A | A |
| 13 | 2 | கௌரி விநாயகபுரம் | A | A |
| 14 | 2 | ஜெயங்கொண்ட விநாயகபுரம் | A | A |
| 15 | 2 | எம்.எம்.நகர் | A | A |
| 16 | 2 | பனிப்புலான் வயல் | B | A |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | 2 | இராமலிங்க நகர் | A | A |
| 18 | 2 | சாய்பாபா நகர் | A | A |
| 19 | 2 | செந்தில் நகர் | A | A |
| 20 | 2 | சோமசுந்தர நகர் | A | A |
| 21 | 2 | தாணிச்சாவூரணி சாலை | A | A |
| 22 | 2 | தில்லை நகர் | A | A |
| 23 | 2 | திருப்பத்தூர் சாலை | A | C |
| 24 | 2 | இராம்நகர் | A | A |
| 25 | 2 | அம்மன் டி.வி.கே.நகர் | A | A |
| 26 | 3 | அண்ணா சாலை | A | A |
| 27 | 3 | அண்ணாசாலை கிழக்கு | B | A |
| 28 | 3 | அண்ணாசாலை வடக்கு | B | A |
| 29 | 3 | கல்லூரி சாலை | A | A |
| 30 | 3 | பனிப்புலான் வயல் | B | A |
| 31 | 3 | ஸ்ரீ காஞ்சி பெரியவர் நகர் | A | A |
| 32 | 3 | திருப்பத்தூர் சாலை | A | C |
| 33 | 3 | திருப்பத்தூர் சாலை தெற்கு காலனி | A | A |
| 34 | 3 | விவேகானந்தபுரம் | A | A |
| 35 | 3 | விவேகானந்தபுரம் கிழக்கு | B | A |
| 36 | 3 | விவேகானந்தபுரம் வடக்கு | B | A |
| 37 | 3 | விவேகானந்தபுரம் மேற்கு | B | A |
| 38 | 3 | திருப்பத்தூர் சாலை எஸ்பிஐ காலனி | A | A |
| 39 | 3 | அழகாபுரி நகர் | A | A |
| 40 | 3 | பாரதி நகர் | A | A |
| 41 | 3 | திருப்பத்தூர் சாலை–முத்துராஜ் நகர் | A | A |
| 42 | 3 | ஸ்ரீ காமாட்சி அம்மன் நகர் | A | A |
| 43 | 3 | ஸ்ரீ மீனாட்சி அம்மன் நகர் | A | A |
| 44 | 3 | ஸ்ரீ பகவான் ரமணமகரிஷி நகர் | B | A |
| 45 | 3 | ஸ்ரீசெல்லியம்மன் நகர் | A | C |
| 46 | 4 | அருணகிரிப்பட்டணம் கிழக்கு | C | A |
| 47 | 4 | அருணகிரிப்பட்டணம் மேற்கு | C | A |
| 48 | 4 | காந்தி நகர் | C | A |
| 49 | 4 | புதூர் அக்ரஹாரம் வடக்கு | C | A |
| 50 | 4 | புதூர் அக்ரஹாரம் தெரு | B | A |
| 51 | 4 | புதூர் தெற்கு தெரு | C | A |
| 52 | 4 | செப்பவயலார் தெரு | C | A |
| 53 | 4 | ஸ்ரீரெங்கபுரம் நடுத் தெரு | C | A |
| 54 | 4 | ஸ்ரீரெங்கபுரம் வடக்கு தெரு | C | A |
| 55 | 4 | ஸ்ரீரெங்கபுரம் தெற்கு தெரு | C | A |
| 56 | 4 | தாழையூர் சாலை | C | A |
| 57 | 4 | திருகப்பூர் தெரு | C | A |
| 58 | 4 | யோகிராம் சூரத்குமார் நகர் | C | A |
| 59 | 4 | அருணகிரிப்பட்டணம் | C | A |

| | | | | |
|---|---|---|---|---|
| 60 | 5 | அ.தி.மு. தெரு | C | A |
| 61 | 5 | அம்பேத்கார் தெரு | C | A |
| 62 | 5 | நடராஜபுரம் 1 வது தெரு | C | A |
| 63 | 5 | நடராஜபுரம் 2 வது தெரு | C | A |
| 64 | 5 | நடராஜபுரம் 3 வது தெரு | C | A |
| 65 | 5 | நேரு தெரு | C | A |
| 66 | 5 | செப்பவயலார் தெரு | C | A |
| 67 | 5 | ஸ்ரீரெங்கபுரம் தெற்கு தெரு | C | A |
| 68 | 5 | திருகப்பூர் தெரு | C | A |
| 69 | 5 | திருவள்ளுவர் தெரு | C | A |
| 70 | 5 | நடராஜபுரம் மேட்டு தெரு | C | A |
| 71 | 6 | அ.தி.மு. தெரு | C | A |
| 72 | 6 | இளந்தடியார் சந்து | C | A |
| 73 | 6 | இரவுசேரி பாதை | C | A |
| 74 | 6 | கிராம முன்சீப் தெரு | C | A |
| 75 | 6 | குருநாதன்கோயில் தெற்கு தெரு | C | A |
| 76 | 6 | குருநாதன்கோயில் தெரு | C | A |
| 77 | 6 | ஜெயங்கொண்டார் தெரு | C | A |
| 78 | 6 | கருப்பணசாமி முளமேடை தெரு | C | A |
| 79 | 6 | மு.மா.அள.தெரு | C | A |
| 80 | 6 | வடக்கு மாட தெற்கு தெரு | C | A |
| 81 | 6 | வடக்கு மாட தெரு | C | A |
| 82 | 6 | ஊரணி கிழக்கு தெரு | C | A |
| 83 | 6 | ஊரணி கீழ்கரை – இரவுசேரி | C | A |
| 84 | 6 | சத்தியமுர்த்தி தெரு | C | A |
| 85 | 6 | வ.ஊ.சி. தெரு | C | A |
| 86 | 6 | வைத்தியலிங்கம் தெரு | C | A |
| 87 | 6 | ஊரணி மேல்கரை – இரவுசேரி | C | A |
| 88 | 6 | ஊரணி தென்கரை – இரவுசேரி | C | A |
| 89 | 7 | தர்மமுனீஸ்வரர் தெரு | B | A |
| 90 | 7 | கல்லுப்பட்டியார் தெரு | B | A |
| 91 | 7 | கண்டதேவி சாலை | B | A |
| 92 | 7 | ரெங்கண்ணா தெரு | B | A |
| 93 | 7 | செ.மு.லெ. தெரு | C | A |
| 94 | 7 | செங்கற்கோவிலார் தெரு | B | A |
| 95 | 7 | சிற்சபேசன் தெரு | B | A |
| 96 | 8 | அள.சுப. தெரு | C | A |
| 97 | 8 | இரவுசேரி பாதை | B | A |
| 98 | 8 | கொ.அ.சித.சந்து | C | A |
| 99 | 8 | கருதாவூரணி பிள்ளையார்கோவில் சன்னதி தெரு | B | A |
| 100 | 8 | கருதாவூரணி பிள்ளையார்கோயில் தெரு | B | A |
| 101 | 8 | கண்டதேவி சாலை | B | A |

| | | | | |
|---|---|---|---|---|
| 102 | 8 | மு.ராம.கி.லெ. தெரு | C | A |
| 103 | 8 | ராம.மெ.லெ. தெரு | B | A |
| 104 | 8 | செ.சுப. தெரு | B | A |
| 105 | 8 | சீனி போலீஸ் சந்து | C | A |
| 106 | 8 | சேக்கப்பன் தெரு | B | A |
| 107 | 8 | சிவன்கோயில் கிழக்கு தெரு | B | A |
| 108 | 8 | சிவன்கோயில் குளக்கால் தெரு | B | A |
| 109 | 8 | சிவன்கோயில் வடக்கு தெரு | B | A |
| 110 | 8 | சிவன்கோயில் தெற்கு தெரு | B | A |
| 111 | 8 | வெ.தெ. தெரு | C | A |
| 112 | 8 | சிற்சபேசன் தெரு | B | A |
| 113 | 9 | கருதாவூரணி வடக்கு தெரு | B | A |
| 114 | 9 | கருதாவூரணி தெற்கு தெரு | B | A |
| 115 | 9 | பால்காவடியார் தெரு | C | A |
| 116 | 9 | பூசைக்கார நாச்சியப்பன் தெரு | B | A |
| 117 | 9 | பொதி நாகப்பன் தெரு | C | A |
| 118 | 9 | புகையிலைக்கருப்பன் தெரு | C | A |
| 119 | 9 | சம்பந்தர் தெரு | B | A |
| 120 | 9 | சம்பந்தர் தெரு விரிவாக்கம் | B | A |
| 121 | 9 | சத்திரத்தார் தெரு | B | A |
| 122 | 9 | திருப்பத்தூர் சாலை | A | C |
| 123 | 10 | கருதாவூரணி மேறிகு தெரு | C | A |
| 124 | 10 | காலி அழகப்பன் தெரு | C | A |
| 125 | 10 | மெ.அரு.நா.மைனர் தெரு | B | A |
| 126 | 10 | மாந்தோப்பு தெரு | A | A |
| 127 | 10 | இராஜாஜி தெரு | B | A |
| 128 | 10 | திருப்பத்தூர் சாலை | A | C |
| 129 | 10 | காலி குட்டையன் தெரு | C | A |
| 130 | 10 | மெ.அரு. தெரு | B | A |
| 131 | 11 | பேருந்து நிலைய தெரு | A | B |
| 132 | 11 | கார்ப்பரேசன் சாலை | A | A |
| 133 | 11 | ஞானநந்தகிரி நகர் | A | A |
| 134 | 11 | கருதாவூரணி குளக்கால் தெரு | A | A |
| 135 | 11 | நாகாடியார் நகர் | B | A |
| 136 | 11 | மாந்தோப்பு தெரு | A | A |
| 137 | 11 | பால்காவடியார் தெரு | A | A |
| 138 | 11 | சரஸ்வதி வாசகசாலை தெரு | A | A |
| 139 | 11 | சுப்பிரமணியபுரம் புது தெரு | A | A |
| 140 | 11 | சுப்பிரமணியபுரம் வடக்கு தெரு | A | A |
| 141 | 11 | திருப்பத்தூர் சாலை | A | C |
| 142 | 11 | வள்ளியப்பசெட்டி ஊரணி வடக்கு | C | A |
| 143 | 11 | வள்ளியப்பசெட்டி ஊரணி மேற்கு | C | A |
| 144 | 11 | வள்ளியப்பசெட்டி ஊரணி | C | A |

| | | | | |
|---|---|---|---|---|
| 145 | 11 | வள்ளியப்பசெட்டி ஊரணி தெற்கு | C | A |
| 146 | 11 | காசிலிங்க நகர் | A | A |
| 147 | 11 | பெத்தேல் நகர் | C | A |
| 148 | 11 | ஸ்ரீகிருஷ்ணா காலனி | C | A |
| 149 | 12 | அரசு மருத்துவமனை சாலை | A | A |
| 150 | 12 | சிலம்பனி வடக்கு தெரு | A | A |
| 151 | 12 | சுப்பிரமணியபுரம் கிழக்கு தெரு | A | A |
| 152 | 12 | சுப்பிரமணியபுரம் நடுத் தெரு | A | A |
| 153 | 12 | சுப்பிரமணியபுரம் புதுத் தெரு | A | A |
| 154 | 12 | சுப்பிரமணியபுரம் தெரு | A | A |
| 155 | 12 | சுப்பிரமணியபுரம் மேற்கு தெரு | A | A |
| 156 | 12 | சிலம்பனி குளக்கால் தெரு | A | A |
| 157 | 12 | சிலம்பனி ஊரணி வடக்கு தெரு | A | A |
| 158 | 13 | அண்ணா நகர் | B | A |
| 159 | 13 | அண்ணாநகர் மெயின் ரோடு | B | A |
| 160 | 13 | கல்லுாரி சாலை | B | A |
| 161 | 13 | கல்லாம்பிரம்பு | B | A |
| 162 | 13 | என்.ஜி.ஜி.ஒ. காலனி | B | A |
| 163 | 13 | சுப்பிரமணியபுரம் புது தெரு | B | A |
| 164 | 13 | தியாகராய நகர் | A | A |
| 165 | 13 | விநாயகபுரம் | C | A |
| 166 | 13 | விநாயகபுரம் முதல் தெரு | B | A |
| 167 | 13 | விநாயகபுரம் புது தெரு | B | A |
| 168 | 13 | விநாயகபுரம் தெரு | B | A |
| 169 | 13 | விநாயகபுரம் மேறிகு | B | A |
| 170 | 13 | அரசு மருத்துவமனை சாலை | B | A |
| 171 | 14 | சிலம்பனி ஊரணி மேற்கு | B | A |
| 172 | 14 | சிலம்பனி சன்னதி தெரு | A | A |
| 173 | 14 | சிலம்பனி தெற்கு தெரு | B | A |
| 174 | 14 | வீரபாண்டியபுரம் கிழக்கு தெரு | B | A |
| 175 | 14 | வீரபாண்டியபுரம் நடுத் தெரு | B | A |
| 176 | 14 | வீரபாண்டியபுரம் மேற்கு தெரு | B | A |
| 177 | 15 | பாரதிதாசன் தெரு | A | A |
| 178 | 15 | கலைவாணர் தெரு | A | A |
| 179 | 15 | லெட்சுமிபுரம் கிழக்கு தெரு | B | A |
| 180 | 15 | மேல பஜார் ரோடு | A | B |
| 181 | 15 | நாச்சியப்பன் தெரு | A | A |
| 182 | 15 | நைனப்பன் தெரு | A | A |
| 183 | 15 | பழனியப்பன் சந்து | A | B |
| 184 | 15 | சிலம்பனி தெற்கு சந்து – 2 | B | A |
| 185 | 15 | சிலம்பனி தெற்கு தெரு | A | A |
| 186 | 15 | தியாகிகள் சாலை | A | B |
| 187 | 15 | திருப்பத்தூர் சாலை | A | C |

| | | | | |
|---|---|---|---|---|
| 188 | 15 | வெ. ஊரணி மேற்கு தெரு | A | A |
| 189 | 15 | வாடியார் தெரு | A | B |
| 189 | 15 | சிலம்பனி தெறிகு சந்து – 1 | B | A |
| 190 | 16 | அள. வீர. வளவு | B | A |
| 191 | 16 | அப்பு.லெ. தெரு | B | A |
| 192 | 16 | க.சோம. தெரு | B | A |
| 193 | 16 | காமராஜர் தெரு | A | A |
| 194 | 16 | கீழ பஜார் ரோடு | B | B |
| 195 | 16 | குண்டுக்கரை ரோடு | B | A |
| 196 | 16 | மீன்புசலார் தெரு | B | A |
| 197 | 16 | நடுப் பஜார் ரோடு | A | A |
| 198 | 16 | நா.அ.சந்து | B | A |
| 199 | 16 | பொந்தலியார் தெரு | A | A |
| 200 | 16 | சி.க.மு. சந்து | A | A |
| 201 | 16 | சாமியாடி பெரியகருப்பன் தெரு | B | A |
| 202 | 16 | தண்ணீர்பந்தலார் தெரு | B | A |
| 203 | 16 | வெ. ஊரணி கிழக்கு தெரு | B | A |
| 204 | 16 | வெ.ஊரணி குளக்கால் தெரு | B | A |
| 205 | 16 | வெ.ஊரணி வடக்கு தெரு | B | A |
| 206 | 16 | வெ.ஊரணி பெருமாள்கோயில் சந்து | B | A |
| 207 | 16 | வெ.ஊரணி மேற்கு தெரு | B | B |
| 208 | 16 | வ.பெரி.மு.சந்து | B | A |
| 209 | 16 | மாணிக்கவிலாஸ் தெரு | B | A |
| 210 | 17 | அள.அரு. வளவு | C | A |
| 211 | 17 | அருணாசலபொய்கை கிழக்கு | C | A |
| 212 | 17 | அருணாச்சலபொய்கை வடக்கு | C | A |
| 213 | 17 | அருணாச்சலபொய்கை தெற்கு | C | A |
| 214 | 17 | அருணாச்சலபொய்கை மேற்கு | C | A |
| 215 | 17 | சின்ன சந்தைக்கடை தெரு | C | A |
| 216 | 17 | சின்ன வடுகன் சந்து | C | A |
| 217 | 17 | கடகம்பட்டிசாமி சந்து | C | A |
| 218 | 17 | கட்டவெள்ளையன் சந்து | C | A |
| 219 | 17 | கீழ வீட்டு வளவு | C | A |
| 220 | 17 | குழந்தைவேலன் சந்து | C | A |
| 221 | 17 | குதிரைப்பாதை ரோடு | B | A |
| 222 | 17 | ப.வெ.அரு.சந்து | C | A |
| 223 | 17 | பள்ளிவாசல்  தெரு | C | A |
| 224 | 17 | பெரிச்சியப்பன் சந்து | C | A |
| 225 | 17 | சுப்பையா சந்து | C | A |
| 226 | 17 | தேனப்பன் சந்து | C | A |
| 227 | 17 | வட்டாணம் சாலை | A | C |
| 228 | 18 | காந்தி சாலை | B | A |
| 229 | 18 | கைலாசவிநாயகர் சன்னதி தெற்கு | B | A |

| | | | | |
|---|---|---|---|---|
| 230 | 18 | கைலாசவிநாயகர் சன்னதி தெரு | B | A |
| 231 | 18 | கட்ட வெள்ளையன் தெரு | B | A |
| 232 | 18 | கீழக்குடியிருப்பு | C | A |
| 233 | 18 | கீழக்குடியிருப்பு குளக்கால் தெரு | C | A |
| 234 | 18 | முளக்கொட்டு தெரு | C | A |
| 235 | 18 | பெரியார் தெரு | C | A |
| 236 | 18 | போக்குமடை சந்து | C | A |
| 237 | 18 | சருகனி சாலை | B | A |
| 238 | 18 | தி. ஊரணி அக்ரஹாரம் | B | A |
| 239 | 18 | தி. ஊரணி கிழக்கு தெரு | B | A |
| 240 | 18 | தி.ஊரணி புது தெற்கு அக்ரஹாரம் | B | A |
| 241 | 18 | தி.ஊரணி வடக்கு அக்ரஹாரம் | B | A |
| 242 | 18 | தி.ஊரணி தெற்கு அக்ரஹாரம் | B | A |
| 243 | 18 | தி.ஊரணி தெற்கு தெரு | C | A |
| 244 | 18 | தி.ஊரணி மேற்கு தெரு | C | A |
| 245 | 18 | வா.வா.சந்து | C | A |
| 246 | 18 | வட்டாணம் சாலை | A | C |
| 247 | 18 | காளியம்மாள் நகர் | B | C |
| 248 | 19 | அரு.லெ.வளவு | C | A |
| 249 | 19 | பாரதியார் தெரு | C | A |
| 250 | 19 | செல்லப்பன் சந்து | C | A |
| 251 | 19 | சொக்கலிங்கம் சந்து | C | A |
| 252 | 19 | கட்டமுருகப்பன் சந்து | C | A |
| 253 | 19 | குப்பான் சந்து | C | A |
| 254 | 19 | மாணிக்கவிலாஸ் தெரு | C | A |
| 255 | 19 | மாயாண்டி தெரு | C | A |
| 256 | 19 | முளக்கொட்டு தெரு | C | A |
| 257 | 19 | பழனியப்பன் சந்து | C | A |
| 258 | 19 | பாத்திரக்கடையார் சந்து | C | A |
| 259 | 19 | பள.வெ.அ. சந்து | C | A |
| 260 | 19 | சொர்ணநாதன் தெரு | B | A |
| 261 | 19 | தொண்டியார் தெரு | B | A |
| 262 | 19 | வெ.ஊரணி தெற்கு | B | A |
| 263 | 19 | பெரிச்சியப்பறி சுந்து | C | A |
| 264 | 20 | அ.தி.தெரு | B | A |
| 265 | 20 | ஆலம்பட்டார் தெரு | B | A |
| 266 | 20 | கம்பர் தெரு | C | A |
| 267 | 20 | கொல்லங்குடியார் மேற்கு தெரு | C | A |
| 268 | 20 | மேலவயல் குளக்கால் தெரு | B | A |
| 269 | 20 | முத்து.க.அ.ராம. தெரு | B | A |
| 270 | 20 | முத்து கரு.தெரு | B | A |
| 271 | 20 | சிவரக்கோட்டையார் தெரு | B | A |
| 272 | 20 | வெ. ஊரணி தெற்கு | B | B |

| | | | | |
|---|---|---|---|---|
| 273 | 20 | கொறிலங்குடியார் தெரு | C | A |
| 274 | 20 | கைலாசநாதபுரம் வடக்கு தெரு | B | A |
| 275 | 21 | சிதம்பரநாதபுரம் கிழக்கு | B | A |
| 276 | 21 | சிதம்பரநாதபுரம் நடுத் தெரு | B | A |
| 277 | 21 | சிதம்பரநாதபுரம் தெரு | B | A |
| 278 | 21 | சிதம்பரநாதபுரம் மேற்கு தெரு | B | A |
| 279 | 21 | க.க.மு. தெரு | C | A |
| 280 | 21 | லெட்சுமிபுரம் மேற்கு தெரு | B | A |
| 281 | 21 | சிலம்பனி ஊரணி தெற்கு | B | A |
| 282 | 21 | சிதம்பரநாதபுரம் இரண்டாம் தெரு | B | A |
| 283 | 21 | வெ.ஊரணி குளக்கால் தெரு | B | A |
| 284 | 22 | ஜீவாநகர் | C | A |
| 285 | 22 | ஜீவாநகர் மேற்கு | C | A |
| 286 | 22 | பெரியகருப்பன் குடியிருப்பு | C | A |
| 287 | 22 | ரெகுநாதபுரம் | B | A |
| 288 | 22 | ரெகுநாதபுரம் கிழக்கு | B | A |
| 289 | 22 | ரெகுநாதபுரம் மேற்கு | B | A |
| 290 | 23 | அம்மச்சி ஊரணி அக்ரஹாரம் | C | A |
| 291 | 23 | அம்மச்சி ஊரணி பாதை | C | A |
| 292 | 23 | காந்தி ரோடு | B | A |
| 293 | 23 | கல்யாணசுந்தரம் நகர் | C | A |
| 294 | 23 | கிருஷ்ணராஜபுரம் கிழக்கு தெரு | C | A |
| 295 | 23 | கிருஷ்ணராஜபுரம் வடக்கு தெரு | C | A |
| 296 | 23 | கிருஷ்ணராஜபுரம் தெற்கு தெரு | C | A |
| 297 | 23 | கிருஷ்ணராஜபுரம் தெரு | C | A |
| 298 | 23 | கிருஷ்ணராஜபுரம் மேற்கு தெரு | C | A |
| 299 | 23 | நித்தியகல்யாணிபுரம் | B | A |
| 300 | 23 | நித்தியகல்யாணிபுரம் கிழக்கு தெரு | C | A |
| 301 | 23 | நித்தியகல்யாணிபுரம் நடுத் தெரு | C | A |
| 302 | 23 | நித்தியகல்யாணிபுரம் வடக்கு தெரு | C | A |
| 303 | 23 | நித்திகல்யாணிபுரம் தெற்கு தெரு | C | A |
| 304 | 23 | நித்தியகல்யாணிபுரம் மேற்கு தெரு | C | A |
| 305 | 23 | நித்தியகல்யாணிபுரம் பர்மா காலனி | C | A |
| 306 | 23 | பெரியசாமி தெரு | C | A |
| 307 | 23 | அம்மச்சி ஊரணி தெற்கு | C | A |
| 308 | 23 | நந்தவனம் நகர் | C | A |
| 309 | 23 | செந்தூர்புரம் | C | A |
| 310 | 24 | க.வீர.ராம. தெரு | C | A |
| 311 | 24 | கைலாசநாதபுரம் | C | A |
| 312 | 24 | கைலாசநாதபுரம் வடக்கு தெரு | B | A |
| 313 | 24 | கைலாசநாதபுரம் தெற்கு தெரு | B | A |
| 314 | 24 | கைலாசநாதபுரம் மேற்கு தெரு | B | A |
| 315 | 24 | மனோரஞ்சித தெரு | B | A |

| | | | | |
|---|---|---|---|---|
| 316 | 24 | பள.அ. தெரு | C | A |
| 317 | 24 | பள.செ.ஊரணி கிழக்கு | C | A |
| 318 | 24 | பள.செ.ஊரணி வடக்கு | C | A |
| 319 | 24 | பள.செ.ஊரணி தெற்கு | C | A |
| 320 | 24 | பள.செ.ஊரணி மேற்கு | C | A |
| 321 | 24 | வைத்திலிங்க பரதேசி சந்து | C | A |
| 322 | 25 | அக்பர் தெரு | C | A |
| 323 | 25 | டாக்டர் ஜாகிர் ஹீசேன் தெரு | C | A |
| 324 | 25 | ஜின்னா தெரு | C | A |
| 325 | 25 | க.வீர.தெரு வடக்கு | B | A |
| 326 | 25 | புது வடக்கு குடியிருப்பு | C | A |
| 327 | 25 | பழைய சருகனி ரோடு | C | A |
| 328 | 25 | சருகனி ரோடு | C | A |
| 329 | 25 | சீதக்காதி தெரு | C | A |
| 330 | 25 | தேனம்மை ஊரணி கிழக்கு | C | A |
| 331 | 25 | தேனம்மை ஊரணி வடக்கு தெரு | C | A |
| 332 | 25 | தேனம்மை ஊரணி வடக்கு தெரு – 1 | C | A |
| 333 | 25 | தேனம்மை ஊரணி வடக்கு தெரு – 2 | C | A |
| 334 | 25 | தேனம்மை ஊரணி பாதை | C | A |
| 335 | 25 | தேனம்மை ஊரணி தெற்கு தெரு | C | A |
| 336 | 25 | தேனம்மை ஊரணி தென்கரை | C | A |
| 337 | 25 | தேனம்மை ஊரணி மேற்கு தெரு | C | A |
| 338 | 25 | தாளாம்பாள் நகர் | C | A |
| 339 | 26 | அழகாபுரி நடுத் தெரு | B | A |
| 340 | 26 | அழகாபுரி வடக்கு தெரு | B | A |
| 341 | 26 | தண்டாயுதபாணிகோயில் தெரு | B | A |
| 342 | 26 | டாக்டர் பொன்னையா தெரு | C | A |
| 343 | 26 | காந்தி ரோடு | B | A |
| 344 | 26 | மு.க.மு. சந்து | C | A |
| 345 | 26 | பள.செ.ரோடு | B | A |
| 346 | 26 | தி.ராம.தி.தெரு | B | A |
| 347 | 26 | வள்ளியப்பன் தெரு | C | A |
| 348 | 26 | வங்காளராமன் தெரு | B | A |
| 349 | 26 | க.வீர.தெரு தெற்கு | C | A |
| 350 | 27 | அழகாபுரி நடுத் தெரு | B | A |
| 351 | 27 | அழகாபுரி வடக்கு தெரு | B | A |
| 352 | 27 | அழகாபுரி தெற்கு தெரு | B | A |
| 353 | 27 | அய்யாதுரை சந்து | C | A |
| 354 | 27 | பீர் சந்து | B | A |
| 355 | 27 | டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரு | C | A |
| 356 | 27 | காந்தி ரோடு | C | A |
| 357 | 27 | காட்டூரணி தெரு | C | A |
| 358 | 27 | குப்பான் சந்து | B | A |

| | | | | |
|---|---|---|---|---|
| 359 | 27 | மார்க்கெட் கிழக்கு தெரு | C | A |
| 360 | 27 | மார்க்கெட் தெற்கு தெரு | C | A |
| 361 | 27 | மார்க்கெட் மேற்கு தெரு | C | A |
| 362 | 27 | முத்துராமன் தெரு | B | A |
| 363 | 27 | பள.செ.ரோடு | B | A |
| 364 | 27 | சுப்பையா சந்து | C | A |
| 365 | 27 | வண்டிப்பேட்டை சந்து | C | A |
| 366 | 27 | ஆத்தங்கரைத் தெரு | C | A |
| 367 | 27 | தாளாம்பாள் நகர் | C | A |

| வ.எண் | புதிதாக உருவாகியுள்ள சாலைகள்/ தெருக்கள்/ சந்துகள் | வார்டு எண். | சொத்துவரி மண்டலம் (ZONE) | காலியிடவரி மண்டலம் (ZONE) |
|---|---|---|---|---|
| 1 | ஜெமினி நகர் | 2 | C | A |
| 2 | சுப்பிரமணியம் அவென்யூ நகர் | 2 | C | A |
| 3 | செல்வபுரம் | 3 | A | C |
| 4 | ஐயப்பன் நகர் | 3 | A | C |
| 5 | வெற்றி நகர் | 3 | A | C |
| 6 | ஸ்ரீஅம்பாள் நகர் | 4 | C | A |
| 7 | வாழ்க வளமுடன் நகர் | 4 | C | A |
| 8 | சங்கர் நகர் | 4 | C | A |
| 9 | ஸ்ரீவாரி அவன்யூ | 11 | C | A |
| 10 | சண்முகா நகர் | 11 | C | A |
| 11 | அபிராமி நகர் | 22 | B | A |
| 12 | மகாலெட்சுமி நகர் | 23 | D | A |
| 13 | சேக்தாவூது நகர் | 25 | C | A |
| 14 | டைமன்சிட்டி | 27 | C | A |
| 15 | கோல்டன்சிட்டி | 27 | C | A |

தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள்/ தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றின் மேலேகண்டுள்ள பட்டியல் மன்றத்தின் பார்வவைக்கும், அனுமதிக்கும் மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு–**

சொத்துவரி/ காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4)துறை, நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள் 01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தேவகோட்டை நகராட்சியில் தற்போது உள்ள நிலையில் 17.22 கோடி கடன் தொகை/நிதி தேவையாக உள்ளது. மேலும் விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்யவேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புக்களை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிக்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்தவேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்தவேண்டிய நிலுவைத் தொகை ஆகியவற்றை கருத்திற்கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியவாறு பொதுசீராய்வு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

பொருள்:17

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்காணும் சாலைகள் மண்சாலைகளாகவும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் பழுதடைந்த சாலைகளாகவும் உள்ளதால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு சிரமமாக உள்ளதால் கீழ்காணும் சாலைகளை மேம்பாடு செய்வது அவசியமாகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தாணிச்சாவூரணி ரோடு குறுக்குத்தெரு (நாச்சியார் நகர் 3–ம் தெரு) பேவர் ப்ளாக் சாலை அமைத்தல் பணி | 5.50 |
| 2 | எம்.எம் நகர் குறுக்குதெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 3 | அண்ணாசாலை சர்ச் வீதி குறுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 6.20 |
| 4 | செப்பவயலார் தெரு குறுக்குத்தெரு பேவர்பிளாக் மற்றும் வடிகால் கட்டும் பணி | 5.10 |
| 5 | அருணகிரிபட்டிணம் கிழக்கு தெரு (மாரியம்மன் கோவில் அருகில்) பாலம் கட்டுதல் பணி. | 5.00 |
| 6 | கார்பரேசன் வீதி தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோவில் வடக்குபுறம் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 7 | விவேகானந்தபுரம் குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணி. | 5.20 |
| 8 | கப்பலூரரார் நகர் சாலை பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 9 | அழகாபுரி நகர் குறுக்குத்தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.10 |
| 10 | தில்லைநகர் 4–வது வீதி குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.70 |
| 11 | சிலம்பணி வடக்கு தெருவில் இருபுறமும் பேவர் பிளாக் தளம் மற்றும் விநாயகபுரம் பகுதி சிறுபாலம் கட்டும் பணி. | 5.30 |
| 12 | சரஸ்வதி வாசகசாலை குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 13 | இரவுசேரி அ.த.மு. குறுக்குதெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 14 | மெ.அரு. குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.20 |
| 15 | வீரபாண்டியபுரம் கிழக்கு குறுக்குத் தெரு பேவர் பிளாக் சாலை மற்றும் லெட்சுமிபுரம் கிழக்கு சிறுபாலம் கட்டுதல் பணி. | 5.20 |
| 16 | கண்ணாடியார் தெரு குறுக்கு, பள.செ. ஊரணி தெற்கு குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.00 |
| 17 | சுப்பையா சந்து பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 6.40 |
| 18 | நா.அ. சந்து பேவர் பிளாக் சாலை (அப்பு லெ தெரு – வ.பெரி. தெரு) சமயபுரம் மாரியம்மன் கோவில் பின்புறம் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.20 |
| 19 | குப்பான் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி மற்றும் வடிகால் கட்டுதல் பணி. | 5.30 |
| 20 | முத்துராமன் தெரு குறுக்கு சாலை பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.20 |
| 21 | அம்மச்சி ஊரணி நந்தவனம் குறுக்குதெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.20 |
| 22 | கண்டதேவி ரோடு குறுக்குதெருவில் வடிகால் கட்டும் பணி | 5.00 |
| 23 | சம்பந்தர் தெரு குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை மற்றும் வடிகால் கட்டுதல் பணி. | 6.80 |
| 24 | கைலாவிநாயகர் கோவில் வீதி பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.80 |
| 25 | பெரியகருப்பன் குடியிருப்பு சந்து பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.30 |
| 26 | சிதம்பரநாதபுரம் 2வது வீதி பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.10 |

| | | |
|---|---|---|
| 27 | ஜீவா நகர் குறுக்குதெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 |
| 28 | சருகணி ரோடு குறுக்குதெரு சிறுபாலம் அமைத்தல் பணி. | 2.50 |
| 29 | வே.தெ.தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.90 |
| 30 | அண்ணாசாலை மெயின்ரோடு பாலம் மற்றும் வடிகால் கட்டுதல் பணி. | 5.20 |

**அலுவலகக்குறிப்பு–**

அ) பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) நகராட்சி இந்த நிதி ஆண்டு நிதிநிலைமைக்கு ஏற்ப பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்:அனுமதிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) கா.சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகர்மன்றம்.**